# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No.32/2019** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா–02 (PW– 02 )** |
| **பெயர்** | :– | **கவியரசன்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | **மாரியப்பன்** |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 16 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை**

நான் சேலம் மாவட்டம், சன்னியாசிகுண்டு, வ.உ.சி நகரில் வசிக்கிறேன். நிழற்பட கலைஞராக தொழில் செய்கிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரிகளை எனக்குத் தெரியாது. கிச்சிபாளையம் ஊரைச் சேர்ந்த செல்லதுரையை தெரியும். நான் ஏற்கனவே கிச்சிபாளையத்தில் வசித்ததால் எனக்குத் தெரியும். சுமார் 07 ஆண்டுகளுக்குமுன் ஒருநாள் செல்லதுரை அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் இருந்தார். அவரது குடும்ப உறுப்பினர்களுடன் அவரை பார்க்க நான் சென்றேன். நான் காவல் நிலையத்திற்கு வெளியே நின்றேன். செல்லதுரையை நான் பார்க்கவில்லை. ஏதோ பிரச்சனை என்று சொன்னார்கள். என்ன பிரச்சனை என்று எனக்குத் தெரியாது. காவல் துறையினர் என்னை விசாரித்தனர். என்னை யார் என்று கேட்டனர். செல்லதுரையின் குடும்பத்தினருடன் வந்ததாக சொன்னேன். இந்த வழக்குப் பற்றி வேறு எதுவும் எனக்குத் தெரியாது.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

கிச்சிபாளையம் என்ற ஊரில் சூரி என்பவரை எனக்குத் தெரியும் என்றால் எனக்குத் தெரியாது. செல்லதுரைக்கும் எனக்கும் 06 ஆண்டுகள் பழக்கம் என்றால் பக்கத்தில் வசித்ததால் தெரியும். சூரிக்கும் செல்லதுரைக்கு தெரிந்த விஜயகுமாரின் குடும்பத்திற்கும் முன்பகை இருந்த விவரம் எனக்குத் தெரியும் என்றால் தெரியாது. சூரியின் மகன்கள் செல்லதுரை தரப்பு சேர்ந்த விஜயகுமாரை கொலை செய்துவிட்டதால் சூரியின் மகன் நெப்போலியனை செல்லதுரையும் அவருடைய ஆட்களும் கொன்று -விட்டனர் என்றால் அது எனக்குத் தெரியாது. அதனால் அவர்களுக்குள்

பகை இருந்தது எனக்குத் தெரியும் என்றால் எனக்குத் தெரியாது. செல்லதுரை எப்போது வெளியில் சென்றாலும் என்னை போன்ற 04 நபர்களுடன் செல்வார் என்றால் அப்படி எதுவும் இல்லை.

22.02.2016-ஆம் தேதியன்று செல்லதுரையும் ஜான் என்கிற சாணக்கியனும் பிணை நிபந்தனை கையொப்பம் இடுவதற்கு சேலம் 02-ஆம் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு வந்தபோது நானும் சதீஸ் என்பவரும் நீதிமன்ற முதன்மை வாயிலுக்குமுன் நின்றோம் என்றால் இல்லை. அங்கே சிலம்பு தரப்பை சேர்ந்த வெங்டேஷ், சக்திவேல், பிரசாத், கார்த்திக் சிவராமன் மறைந்திருப்பதை பார்த்தேன் என்றால் இல்லை. செல்லதுரையை எச்சரிக்க நீங்கள் முயற்சி செய்த சமயத்தில் செல்லதுரையும் சாணக்கியனும் நீதிமன்றத்தில் இருந்து அவர்களுடைய இருச் சக்கர வாகனத்தில் முதன்மை வாயில் வழியாக வெளியே வந்து தெற்கு பக்கம் திரும்பி 02-ஆம் வாயிலுக்கு அருகே உள்ள பேருந்து நிறுத்தம் உள்ள இடத்தில் அழகுவேல் என்பவரிடம் பேசிக்கொண்டிருந்ததாகவும் அந்த இடத்தில் இருந்து சற்று தூரம் தள்ளி, சுருட்டை பாலு, தண்டி என்கிற ஜெயக்குமார் ஆகிய இருவரும் இருந்ததாவும் சுருட்டை பாலு தண்டியிடம் குண்டை வீசுடா என்று சொன்னதும் தண்டி கையில் வைத்திருந்த ஒரு பையில் இருந்து நாட்டு வெடிக்குண்டை எடுத்து செல்லதுரை இருந்த இடத்தை நோக்கி வீசியதாகவும் செல்லதுரை அங்கு இருந்தவர்களும் குனிந்துகொண்டதும் குண்டு நீதிமன்ற சுவற்றில் பட்டு வெடித்து சிதறி புகையுண்டதாகவும் செல்லதுரைக்கு வலது கை நடுவிரலிலும் வலது புஜத்திலும் சாணுக்கு வலது மார்புக்கு கீழும் காயம் ஏற்பட்டதாகவும் அவர்களை நோக்கி கத்தி மற்றும் இரும்பு கம்பிகளுடன் தண்டி, சுருட்டை

பாலு ஆகியோர் ஓடிவந்ததாகவும் செல்லதுரை தரப்பினர் உரிமையியல் நீதிமன்றம் வழியாக ஓடியபோது சிலம்பு, ஜீசஸ், மோசஸ், தண்டி, விக்கி, மணிகண்டன், டெனிபா, பாலாஜி, கார்த்திக், சிவராமன் ஆகியோர் தங்கள் கைகளில் ஆயுதங்களுடன் அவர்களை துரத்தினார்கள் என்றும் சாணை வெட்டி விசிறியபோது அவருக்கு வெட்டு விழவில்லை என்றும் மணிகண்டன் பெரிய கத்தியால் அழகுவேலை பின்னந்தலையில் வெட்டியதாகவும் அந்த பகுதியில் இருந்த வழக்குரைஞர்களும் வழி போக்கர்களும் சத்தம் போட்டதும் வந்தவர்கள் ஓடிவிட்டதாகவும் செல்லதுரையும் சாணும் ஏற்காட்டில் ஒளிந்துகொண்டதாகவும் அவர்கள் அழைத்ததன்பேரில் நீங்கள் சென்று கூட்டிவந்து காவல் நிலையத்திற்கு சென்றதாகவும் அங்கு சாண் புகார் கொடுத்ததாகவும் புலனாய்வின்போது சொல்லிவிட்டு தற்போது பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**02–ஆம், 17–ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

**08–ஆம், 10–ஆம், 11–ஆம், 15–ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

**21–ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

**03–ஆம், 06–ஆம், 07–ஆம், 09–ஆம், 12–ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இல்லை.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.